சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – 2012–2013–ஆம் ஆண்டு புதிய அறிவிப்புகள் – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை இலக்கிய மேம்பாட்டுப் பணி அமைப்பு மூலம் சிறந்த எழுத்தாளர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை ரூ.20,000/–லிருந்து ரூ.40,000/– ஆக உயர்த்தி வழங்குதல் –ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (சிஉதி) துறை

அரசாணை (நிலை) எண். 68

நாள்:27.06.2012
ஆனி 13 திருவள்ளுவராண்டு 2043
படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.58, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை , நாள் 04.04.2003
2. அரசாணை (நிலை) எண்.81, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை , நாள் 10.07.2006.
3. ஆணையர், ஆதிதிராவிடர் நலம் அவர்களின் கடிதம் ந.க.எண்.வி1/9270/2011, நாள் 28.03.2012..

--- -- ---

ஆணை

பார்வை ஒன்றில் காணும் அரசாணையில் ஆதிதிராவிடர்களின் கலை இலக்கிய மேம்பாட்டுப் பணிக்காக 2002–2003 ஆம் ஆண்டின் வரவு செலவு கூட்டத் தொடரின் அறிவிப்பின் அடிப்படையில் தனி பணிக்குழு நிதியாக ரூ.50.00 இலட்சம் ஒதுக்கப்பட்டு, அந்நிதியினை கீழ்க்காணும் பணிகளுக்கு பயன்படுத்தலாமென ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(அ) தலித் ஆராய்ச்சி மையம்

(ஆ) ஆதிதிராவிடர்களின் திறமையை மேம்படுத்த பயிற்சிக் கல்லூரி மாணவர்களைத் தெரிந்தெடுத்தல்

(இ) தலித் ஆவண காப்பகம்

(ஈ) தலித்களின் கலை இலக்கிய உயர்வை மேம்படுத்தி அவர்களின் எழுத்தாற்றலை ஊக்குவிக்க ஒரு தனி அமைப்பு ஏற்படுத்துதல்.

2. பார்வை இரண்டில் காணும் அரசாணையில் உள்ள நடைமுறைகளைப் பின்பற்றி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை இலக்கிய மேம்பாட்டுப் பணிக்கான தனி பணிக்குழு நிதியாக ஒப்பளிக்கப்பட்ட ரூ.50.00 இலட்சத்திலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் 10 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் எழுத்தாளர்களுக்கும், ஆதிதிராவிடர்களின் பிரச்சனை பற்றி எழுதும் ஆதிதிராவிடர் அல்லாத எழுத்தாளர் ஒருவருக்கும், ஆக மொத்தம் 11 எழுத்தாளர்களுக்கு, அவர்களின் படைப்புகளை தேர்வு குழு மூலம் தேர்வு செய்து தலா ரூ.20,000/– அல்லது நூல் வெளியிட ஆகும் செலவு இதில் எது குறைவோ அந்தத் தொகை வழங்க ஆணை வெளியிடப்பட்டது.

4. மேற்படி உதவித்தொகை தமிழ் படைப்பாளிகளுக்கு மட்டுமே வழங்கப்படும் எனவும், எம்.பில், பி.எச்.டி, போன்ற படிப்புகளுக்கு தயாரிக்கப்படும் ஆராய்ச்சி கட்டுரைகளுக்கு அரிதான சிறப்புடையதாக (Exceptional Value) இருந்தாலன்றி உதவி தொகை வழங்கப்படமாட்டாது எனவும், அனுமதி அளிக்கப்பட்ட தொகையில் 50 சதவீதம் முன்பணமாகவும் எஞ்சிய 50 சதவீதம் பணிமுடித்து 50 புத்தகங்களை ஆணையர் அலுவலகத்திற்கு வழங்கிய பின்னரே தொகை வழங்கப்படும்.

5. எழுத்தாளர்களால் வெளியிடப்படும் படைப்புகள் 90 பக்கங்களுக்கு குறையாமல் தயாரித்து 1000 பிரதிகளுக்கு குறையாமல் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளில் இருந்து மூன்று மாதங்களுக்குள் வெளியிடப்பட வேண்டும் எனவும், அப்புத்தகங்கள் எந்தவித கட்டணமும் இல்லாமல் ஆணையர் அலுவலகத்திற்கு 50 பிரதிகள் வழங்கப்பட வேண்டும் எனவும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது ரூ.50.00 இலட்சம் முதலீட்டிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து 11 எழுத்தாளர்களுக்கு ரூ.2.20 இலட்சம் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வருகிறது.

6. தற்போது 2012–2013–ஆம் ஆண்டு புதிய அறிவிப்புகளில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் கலை இலக்கிய மேம்பாட்டுப் பணி அமைப்பு மூலம் சிறந்த எழுத்தாளர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை ரூ.20,000/–லிருந்து ரூ.40,000/– ஆக உயர்த்தி வழங்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வகையில் 11 எழுத்தாளர்களுக்கு ரூ.40,000/– வீதம் ரூ.4,40,000/– மற்றும் இதர செலவினங்களுக்காக ரூ.20,000/– ஆக, மொத்த செலவினம் ரூ.4,60,000/– ஏற்படும் என்றும், இச்செலவினத்தினை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை இலக்கிய மேம்பாட்டு பணிக்கான தனி பணிக்குழு முதிர்விற்கு பின்கிடைக்கும் மொத்த தொகை ரூ.73,24,235/– லிருந்து கிடைக்கும் ரூ.7.32 இலட்சம் வட்டித் தொகைக்குள் மேற்கொள்ளலாம் எனவும் எனவே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை, இலக்கிய மேம்பாட்டு பணி அமைப்பு மூலம் சிறந்த எழுத்தாளர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை ரூ.20,000/– த்திலிருந்து ரூ.40,000/– ஆக உயர்த்தி வழங்க அரசாணை வெளியிடுமாறு ஆணையர், ஆதிதிராவிடர் நலம் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

7. ஆணையர், ஆதிதிராவிடர் நலம் அவர்களின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து கலை இலக்கிய மேம்பாட்டு பணிக்கான தனி பணிக்குழு நிதி (Corous Fund) யிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிட எழுத்தாளர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகையை ரூ.20,000/–த்திலிருந்து ரூ.40,000/– ஆக உயர்த்தியும், பார்வை 2–ல் வ.எண்.3–ஐ தவிர ஏனைய நடைமுறைகளைப் பின்பற்றி பரிசுத் தொகையினை வழங்க அரசு ஆணையிடுகிறது.

8. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 35981, நாள் 25.6.2012 இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

ஆ.சு.ஜீவரத்தினம்,
அரசு செயலாளர்

பெறுநர்
செயலர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை/
தலைவர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை இலக்கிய மேம்பாட்டுப்பணி,
சென்னை–9
ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை– 5/
உறுப்பினர் செயலர், கலை இலக்கிய மேம்பாட்டுப்பணி, சென்னை–5
இயக்குநர், பழங்குடியினர்நலம், சென்னை–5
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை– 101
இயக்குநர், தமிழ் வளர்ச்சித்துறை, தமிழ் வளர்ச்சி வளாகம், முதல் தளம்,
ஹால்ஸ் சாலை, சென்னை–8
முனைவர் கா.மு.பாபுஜி, தமிழ்த்துறை தலைவர்,விவேகானந்தா கல்லூரி, சென்னை
முனைவர் சு.வேணு, திருமகள் அரசினர் கல்லூரி, குடியாத்தம், வேலூர்.
இயக்குநர்/உறுப்பினர் செயலர்/ ஆதிதிராவிடர் நல இயக்குநரகம், சென்னை–5 வழியாக

நகல்:–
முதலமைச்சரின் செயலர், சென்னை–9
ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9
நிதித்துறை, சென்னை–9
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(அநமு1/ ஆதிந8)துறை, சென்னை–9
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

27/6/2012

பிரிவு அலுவலர்.